செய்தி வெளியீடு எண். 1063 நாள் : 3.12.2010

# செய்தி வெளியீடு

## தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் டிசம்பர் 7ம் தேதி முதல் 9ம் தேதி வரையில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் அமைச்சர்கள் முன்னிலையில் அனைத்து பயனாளிகளுக்கும்அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

*******

தமிழகத்தைக் குடிசையில்லாத மாநிலமாக மாற்றிடும் உன்னத நோக்கத்துடன் 21 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ் **2010-11** முதல் **2015-16** வரையிலான ஆறு ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட முடிவு செய்து, **2010-11**ஆம் ஆண்டில் முதல் கட்டமாக **3** இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கான்கிரீட் வீடுகள் பெறத் தகுதி வாய்ந்த எஞ்சிய குடிசை வாழ் மக்களுக்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் அடையாள அட்டை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த அடையாள அட்டை வழங்கும் பணியினை **7.12.2010** தொடங்கி **9.12.2010**க்குள் ஒரே கால கட்டத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

தமிழகம் முழுவதும் நடைபெறும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள், பங்கேற்கும் மாவட்டங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| **1.** | **மதுரை** | **திரு.மு.க.அழகிரி,**<br>மாண்புமிகு மத்திய இராசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் |
| **2.** | **திருநெல்வேலி** | **திரு. இரா. ஆவுடையப்பன்,**<br>மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்<br>**திரு. டி.பி.எம். மைதீன்கான்,**<br>மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் |
| **3.** | **தஞ்சாவூர்** | **திரு. கோ.சி. மணி,**<br>மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் **மற்றும்**<br>**திரு.எஸ்.எஸ். பழனிமாணிக்கம்,**<br>மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர். |
| **4.** | **சேலம்** | **திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,**<br>மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் |
| **5.** | **வேலூர்** | **திரு.துரைமுருகன்,**<br>மாண்புமிகு சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| **6.** | **விழுப்புரம்** | **முனைவர் க. பொன்முடி,**<br>மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் |
| **7.** | **திருச்சிராப்பள்ளி** | **திரு. கே.என். நேரு,**<br>மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் |
| **8.** | **கடலூர்** | **திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**<br>மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| **9.** | **கோயம்புத்தூர்** | **திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி**<br>மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும்<br>கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் |
| **10.** | **திண்டுக்கல்** | **திரு. இ. பெரியசாமி,**<br>மாண்புமிகு வருவாய்த் துறை மற்றும்<br>வீட்டுவசதித்துறை அமைச்சர் |
| **11.** | **கன்னியாகுமரி** | **திரு. என். சுரேஷ்ராஜன்,**<br>மாண்புமிகு சுற்றுலாத் துறை மற்றும்<br>பத்திரபதிவுத் துறை அமைச்சர். |
| **12.** | **திருவண்ணாமலை** | **திரு.தண்டராம்பட்டு எ.வ. வேலு**<br>மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் |
| **13.** | **இராமநாதபுரம்** | **திரு. சுப.தங்கவேலு,**<br>மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் மற்றும்<br>இடவசதி கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் |
| **14.** | **விருதுநகர்** | **திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்,**<br>மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் |
| **15.** | **காஞ்சிபுரம்** | **திரு.தா.மோ. அன்பரசன்,**<br>மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் |
| **16.** | **சிவகங்கை** | **திரு. கே.ஆர். பெரியகருப்பன்,**<br>மாண்புமிகு அறநிலைத்துறை அமைச்சர் |
| **17.** | **கிருஷ்ணகிரி** | **திரு. தங்கம் தென்னரசு,**<br>மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் |
| **18.** | **நாகப்பட்டினம்** | **திரு.எஸ்.என்.எம். உபயதுல்லா,**<br>மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் |
| **19.** | **ஈரோடு** | **திரு. என். செல்வராஜ்,**<br>மாண்புமிகு வனத்துறை அமைச்சர் |
| **20.** | **திருப்பூர்** | **திரு.வெள்ளக்கோயில் சாமிநாதன்**<br>மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| **21.** | **அரியலூர்** | **டாக்டர் திருமதி. பூங்கோதை**<br>மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் |
| **22.** | **தூத்துக்குடி** | **திருமதி. கீதாஜீவன்,**<br>மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் |
| **23.** | **புதுக்கோட்டை** | **திருமதி. தமிழரசி**<br>மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் |
| **24.** | **திருவள்ளூர்** | **திரு. கே.பி.பி.சாமி,**<br>மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் |
| **25.** | **திருவாரூர்** | **திரு. உ. மதிவாணன்,**<br>மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் |
| **26.** | **நீலகிரி** | **திரு. கா. இராமச்சந்திரன்,**<br>மாண்புமிகு கதர் வாரியத்துறை அமைச்சர் |
| **27.** | **கரூர் மற்றும் பெரம்பலூர்** | **திரு.** D. **நெப்போலியன்**<br>மாண்புமிகு மத்திய சமூகநீதித்துறை இணை அமைச்சர் |
| **28.** | **நாமக்கல்** | **திரு.** S. **காந்திசெல்வன்,**<br>மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் |
| **29.** | **தர்மபுரி** | **திரு. வி.பி. துரைசாமி,**<br>தமிழக சட்டப்பேரவை துணைத்தலைவர் |
| **30.** | **தேனி** | **திரு. இரா. சக்கரபாணி**<br>அரசு தலைமைக் கொறடா |

* * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.